# <u>சாதாரண கூட்டம்</u>

2025–ம் ஆண்டு நகர்மன்ற கூட்டம் டிசம்பர் மாதம் 23–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>பொருள் எண் 1</u>**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் டிசம்பர் 2025 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.1554/2014/சி1**

**தீர்மான எண்.239 நாள்.23.12.2025.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**<u>பொருள் எண் 2</u>**

பொது சுகாதார வாகனம் எண். TN 34 R 4132 கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் வருடந்தோறும் வாகனத்தில் உள்ள அனைத்து பழுது பணிகளையும், மேற்கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெறப்பட்டு வரப்படுகிறது. கடந்த 2024–ம் ஆண்டு பெறப்பட்ட தகுதிச் சான்றிற்கான காலக்கெடு 07.11.2025–ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது, எனவே, தொடர்ந்து வாகனத்தை இயக்கவும் மேற்காணும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து பழுது பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு உரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S. ERODE SP MAHA MOTORS, ERODE. நிறுவனம் மூலம் வரப்பெற்ற உத்தேச செலவினம் ரூ. 178000/– க்குள் செலவினம் மேற்கொள்ளவும் இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.240 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 3</u>**

பொது சுகாதார வாகனம் எண்.TN 34 Y 4624 PIAGGIO ஆட்டோவை வருடந்தோறும் வாகனத்தில் உள்ள அனைத்து பழுது பணிகளையும், மேற்கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெறப்பட்டு வரப்படுகிறது. கடந்த 2024–ம் ஆண்டு பெறப்பட்டு தகுதிச் சான்றிற்கான காலக்கெடு 07.01.2026–ம் தேதியுடம் முடிவடைய உள்ளது.எனவே,தொடர்ந்து வாகனத்தை இயக்கவும் மேற்காணும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து பழுது பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு உரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S. ERODE SP MAHA MOTORS ERODE. நிறுவனம் மூலம் வரப்பெற்ற உத்தேச செலவினம் ரூ.97500/– க்குள் செலவினம் மேற்கொள்ளவும் இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.241 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 4</u>**

நகராட்சி நிர்வாக மண்டல, இயக்குநர் சேலம் – 5 அவர்களின் வாட்ஸ் ஆப் செய்தியில், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை அரைத்து உரமாக்கும் உரத்தில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து, மற்றும் சாம்பல் சத்து (NPK) போன்றவைகள் எந்த எந்த அளவுகளில் உள்ளது என்பது குறித்து M/S ENVIRO FARMERS LABS & TESTING SERVICES (OPC) PRIVATE LIMITED, COVAI என்ற நிறுவனத்தில் பகுப்பாய்வு செய்து உரிய சான்றினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் கீழ் உருவாகும் மக்கும் உரத்தினை பகுப்பாய்வு செய்யவும், அதற்காக

வரப்பெற்ற செலவினப் பட்டியல் தொகை ரூ.8260/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.1881/2025/எப்1**

**தீர்மான எண்.242 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 5</u>**

அரசாணை (நிலை) எண்: 122 கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன்பிடி மற்றும் மீனவர் நலத்துறை நாள் 18.07.2025-ன் படியும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பின் வாயிலாகவும், தமிழகத்தில் உள்ள 72 இடங்களில் விலங்குகளுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மைய கட்டிடங்கள் கட்ட ரூ.22.00/- கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பள்ளிபாளையம் நகராட்சிக்கு விலங்குகளுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையம் நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம், கட்ட அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இந்நகராட்சிக்கு சொந்தமான எலந்தக்குட்டை கிராமம், சின்னாகவுண்டம்பாளையத்தில் உள்ள 20.36 ஏக்கர் நிலத்தில் சுமார் 5000 சதுரடியில் நவீன முறையில் விலங்குகளுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையம் புதியதாக கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.1826/2025/எச்1**

**தீர்மான எண்.243 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 6</u>**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி பொதுசுகாதாரம் பூச்சிகள் மற்றும் தண்ணீர் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், தடுக்கும் பணிக்கு தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 21 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்பொழுது நோய் தொற்றுகள் அதிகரிப்பதற்கான கால சூழ்நிலைகள் உள்ளதாலும், பொதுசுகாதார பணி அவசர அவசியம் கருதி 01.12.2025 முதல் 28.02.2025 முடிய மூன்று மாதங்களுக்கு 30 எண்ணிக்கை தற்காலிக களப்பணி பணியாளர்களை நியமனம் செய்து பணி நீட்டிப்பு செய்யவும், 3 மாதங்களுக்கான செலவினத் தொகை ரூ.12,00,000/- ஆகும் எனவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.586/2025/எச்1**

**தீர்மான எண்.244 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 7</u>**

பள்ளிபாளையம் நகராட்சி, பள்ளிபாளையம் கிராமம், வார்டு எண். 9, சர்வே எண் 631/ 3A -ல் , 25அடி அகலம், 198 அடி நீளம், பரப்பளவு 4950. சதுர அடி தடத்தினை திரு. சி.முரளி (எ) முரளி கிருஷ்ணன், த/பெ. சொக்கலிங்கம், திரு. சி. மகேந்திரன் த/பெ. சொக்கலிங்கம் என்பவர், நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். அடிப்படை வசதிகளான சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி தானமாக வழங்க உள்ள இடத்தினை நகராட்சி ஏற்பது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண்.1507/2025/எப்1**

**தீர்மான எண்.245 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 8</u>**

பள்ளிபாளையம் நகராட்சி குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2025-26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 18.11.2025-ம் தேதி செவ்வாய்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–26** பள்ளிபாளையம் நகராட்சி வார்டு எண்.11 மாதாபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடத்தில் பேவர் பிளாக் மற்றும் கான்கிரீட் படிகட்டு வசதி அமைத்தல் | 7,90,000 | M/s.யுவா பில்டர்ஸ், 3/333, குள்ளநாய்க்கன் பாளையம், குப்பாண்டாம்பாளையம், கொமராபாளையம். | -0.08% குறைவு |
| | | | ஜிஎஸ்சி டெக்னாலஜி, 39டி, ஆர்.பி காம்பளக்ஸ், பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் – 638 | 1.34% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் –0.08% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.யுவா பில்டர்ஸ், கொமராபாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று **பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க. எண்.1628/2025/இ1**

**தீர்மான எண்.246 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

பள்ளிபாளையம் நகராட்சி பொதுநிதி திட்டம் 2025–26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 18.11.2025–ம் தேதி செவ்வாய்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **பொதுநிதி 2025–26** பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 32 கழிப்பிடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3,00,000 | M/s.யுவா பில்டர்ஸ், 3/333, குள்ளநாய்க்கன் பாளையம், குப்பாண்டாம்பாளையம், கொமராபாளையம். | -0.10% குறைவு |
| | | | ஜிஎஸ்சி டெக்னாலஜி, 39டி, ஆர்.பி காம்பளக்ஸ், பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் – 638 | 0.95% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் –0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.யுவா பில்டர்ஸ், கொமராபாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1435/2025/இ1**

**தீர்மான எண்.247 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

பள்ளிபாளையம் நகராட்சி பொதுநிதி திட்டம் 2025–26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 21.11.2025–ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **பொது நிதி 2025-26** பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21வார்டு பகுதிகளில் சாலைகளில் குண்டு குழிகளை சீர்செய்தல் | 2,80,000 | M/s.பெரியாண்டிச்சியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், 165, ஈரோடு சக்தி ரோடு, சலங்கபாளையம், ஈரோடு. | -0.20% குறைவு |
| | | | M/s.வி.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ், 30D4, பள்ளிபாளையம் ரோடு, குமாராபாளையம், ஈரோடு. | 3.35% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் -0.20% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.பெரியாண்டிச்சியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ். ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க. எண்.1362/2025/இ1**

**தீர்மான எண்.248 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 11**

பள்ளிபாளையம் நகராட்சி குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2025-26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 10.12.2025-ம் தேதி புதன்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-26** பள்ளிபாளையம் நகராட்சி வார்டு எண்.04 நாட்டாகவுண்டன்புதூர் நாகர்புற்றுகோவில் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுசுவர் அமைத்தல் | 3,50,000 | M/s.யுவா பில்டர்ஸ், 3/333, குள்ளநாய்க்கன் பாளையம், குப்பாண்டாம்பாளையம், கொமராபாளையம். | -0.48% குறைவு |
| | | | ஜிஎஸ்சி டெக்னாலஜி, 39டி, ஆர்.பி காம்பளக்ஸ், பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் - 638 | 1.50% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் -0.48% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.யுவா பில்டர்ஸ், கொமராபாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று **பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க. எண்.1714/2025/இ1**

**தீர்மான எண்.249 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசாணை எண் (4u) 56, நாள்.21.11.2025 ன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பள்ளிபாளையம் நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் கீழ்கண்ட பணிக்கு 24.11.2025ம் தேதி திங்கட்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பள்ளிபாளையம் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் பணி (3 வருடங்கள்) | 74,78,814 | M/s.சங்கீதா ஹோட்டல் 4/1, காந்திபுரம் 2ம் வீதி, பள்ளிபாளையம். | -0.48% குறைவு |
| | | | M/s. TN கேட்டரிங் 69,ஆவாரங்காடு மேற்கு காமராஜ் படிப்பகம், பள்ளிபாளையம் | 1.50% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் –0.48% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.சங்கீதா ஹோட்டல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க. எண்.1714/2025/இ1**

**தீர்மான எண்.250 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண் 13**</u>

பள்ளிபாளையம் நகராட்சி ஆவாரங்காடு பகுதியில் நகராட்சி சமுதயாக்கூடத்தின் பின்புறம் உள்ள தியான மண்டபத்தின் முன்புறம் கேட் அமைப்பதற்கு இடையூறாக உள்ள சின்டேக்ஸ் டேங்கினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண்.1810/2025/இ1**

**தீர்மான எண்.251 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 14**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளியில் பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்கள் தண்ணீர் உபயோகத்திற்காக ஒற்றை தூணுடன் கூடிய சின்டேக்ஸ் டேங்க் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்ளலாம். நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம்.

**ந.க. எண்.1823/2025/இ1**

**தீர்மான எண்.252 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 15**

பள்ளிபாளையம் நகராட்சியில் பொதுப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பிரிண்ட் மற்றும் ஜெராக்ஸ் எடுக்கப்படும் நிலையில் பேப்பர் உள்ளே சென்று சிக்கிக் கொள்கிறது. இதனை சரிசெய்ய இயலாத காரணத்தால், புதியதாக கருப்பு நிற பிரிண்டர் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க. எண்.1823/2025/இ1**

**தீர்மான எண்.253 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 16**

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்காக 93 விசைபம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விசைபம்புகளில் பழுது ஏற்பட்டால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீரல்லாத தண்ணீர் தேவை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், கோடைகாலத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீர் விநியோகம் செய்ய உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்ய ஆறு மாதத்திற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/-ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.254 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 17**

பள்ளிபாளையம் நகராட்சி வார்டு எண் 4 ல் பாவடி தெரு பகுதியில் அமைந்துள்ள அரச மரத்தின் கிளைகள் அருகில் வசித்து வரும் குடியிருப்புகளுக்கு படர்ந்து சில விஷ பூச்சிகள் வருவதால் பொதுமக்களின் நலன் கருதியும், குழந்தைகளின் நலன் கருதியும் படர்ந்துள்ள அரச மரக் கிளைகளை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.255 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 18**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் பழுதடைந்துள்ள தண்ணீர் தொட்டியினை இடித்து விட்டு அதற்கு மாற்றாக புதியதாக தண்ணீர் தொட்டி கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,00,000 /-ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.256 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 19**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கே.ஆர்.பி.ஏ.டி.ரோடு பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடத்தில் உள்ள தண்ணீர் டேங்க் முழுவதும் பழுதடைந்துள்ளது. மேலும், வார்டு எண் 15 மயானத்தில் உள்ள தண்ணீர் டேங்க் பழுதடைந்துள்ளது. எனவே இவ்விரு பகுதிகளிலும் பழுதடைந்துள்ள தண்ணீர் டேங்கிற்கு மாற்றாக புதியதாக 2000 கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் அதன் குழாய்களை மாற்றுவதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 40,000 /-ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.257 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 20**

பள்ளிபாளையம் நகராட்சியில் நடைபெற்ற நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் சொத்துவரி பெயர்மாற்றம் குறித்த பொருள் எண் 24, தீர்மானம் எண் 87 நாள்.24.04.2023ம் தேதிய தீர்மானத்தில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்வதற்கு கிரைய ஆவணத்தில் **1%** சதவீதம் பெயர் மாற்றக்கட்டணம் வசூல் செய்வதற்கு மன்றத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், செட்டில்மெண்ட் ஆவணங்களுக்கு பெயர் மாற்றக்கட்டணம் பொருள் எண்.2, தீர்மானம் எண் 300 நாள்.30.11.2023ம் தேதிய தீர்மானத்தில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. தற்போது பள்ளிபாளையம் நகராட்சியில் பெறப்படும் சொத்துவரி பெயர் மாற்ற ஆவணங்களில் உள்ள சொத்துமதிப்பிற்கு **1 %** சதவீதம் வங்கி வரைவோலை எடுப்பது பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர்கள்

மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் நகராட்சி பகுதிகளில் கிரைய பத்திர ஆவணங்கள் மற்றும் செட்டில்மெண்ட், தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் மிகுதியாக பத்திரபதிவு செய்யப்படுவதால், பொதுமக்களின் நலன் கருதி சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணத்தில் 01.01.2026 முதல் மேற்கண்ட பெயர்மாற்றக்கட்டணத் தொகை 1 % சதவீதத்தினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு பெயர்மாற்ற விண்ணபத்திற்கு 1 % சதவீதம் பெயர்மாற்றக் கட்டணமாக மன்றத்தால் 24.04.2023ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. நாளது தேதி வரை இவ்வகையில் தொகை ரூ.21.43/-இலட்சம் கட்டணமாக பெறப்பட்டுள்ளது. தற்போது இக்கட்டணத்தை நீக்கும் போது நகராட்சியின் நிதி நிலைமை மேலும் நெருக்கடிக்குள்ளாகும். எனவே இதனை கருத்தில் கொண்டு மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.258 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 21**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் தேர்தல் பணிகளுக்காக விளம்பர பதாகைகள் நகரின் முக்கியப் பகுதிகளில் வைக்கப்பட்டது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விளம்பர பதாகைகள் வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கும், 14.11.2025 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | SJ Digital Flex Printing<br>58/1, ஸ்ரீ குரு டவர்ஸ்<br>சங்ககிரி மெயின் ரோடு,<br>பள்ளிபாளையம். | ரூ.29550/- |
| 2) | ஸ்டார் டிஜிட்டல்<br>428/11, குமாரபாளையம் மெயின் ரோடு,<br>பள்ளிபாளையம். | ரூ.30850/- |
| 3) | ஆலயம் பிளக்ஸ் பிரிண்டிங்<br>திருச்செங்கோடு ரோடு,<br>பள்ளிபாளையம். | ரூ.33750/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேற்கண்ட பணியினை மேற்கொண்டதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.259 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 22**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நிரந்தர மின்பணியாளர் எவரும் இல்லாததால், அனைத்து தெருவிளக்குகளையும் பராமரிக்க இயலாமல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 3 மின் பணியாளர்களை நியமிக்கவும், நகராட்சிக்கு சொந்தமான மினி எர்த் மூவர் (JCB) வாகனத்தினை இயக்க1 ஓட்டுநரை ஒப்பந்த அடிப்படையில் (மொத்தம் 4 பணியாளர்கள்) பணிகள் செய்வதற்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (பிப்ரவரி 2026 முதல் ஏப்ரல் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.4,15,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.260 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 23</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிகமாக ஒப்பந்த முறையில் 14 பணியாளர்களை கொண்டு பணிமேற்கொள்வதற்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (பிப்ரவரி 2026 முதல் ஏப்ரல் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.8,50,000/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.261 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 24</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் பணியிடம் மட்டுமே உள்ள நிலையில், 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பணிக்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (பிப்ரவரி 2026 முதல் ஏப்ரல் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,40,000/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.262 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 25</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 4 மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 4 மின்மோட்டார்களை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கவும், மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் 7 பேரை ஒப்பந்த முறையில் நியமித்திடவும், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பயோ கேஸ் பிளாண்டினை பராமரிக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்கள், பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்படும் அடைப்புகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு 2 பணியாளர்கள் நியமிக்கவும் (மொத்தம் 13 பணியாளர்கள்) ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (பிப்ரவரி 2026 முதல் ஏப்ரல் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.9,30,000/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.263 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 26**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் தற்போது அம்ரூத் 2.0 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் புதியதாக பதிக்கப்பட்டுள்ள HDPE பைப்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய பைப்புகளை இணைக்கும் இயந்திரம் புதியதாக 1 எண்ணிக்கையிலான இயந்திரம் வாங்க செலவினம் ரூ.25,000/-க்கு ஏற்கனவே ஜனவரி 2025 மாத நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் கூடுதலாக 1 எண்ணிக்கையில் மொத்தம் 2 எண்ணிக்கையிலான இயந்திரங்களை வாங்க ஆகும் கூடுதல் செலவினம் ரூ.75,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண்.1855/2025/இ1**

**தீர்மான எண்.264 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 27**

மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் மாவட்ட ஆட்சியத் தலைவர், நாமக்கல் அலுவலகத்தில் நடைபெறும் 2026ஆம் ஆண்டு ஜனவரி 26 ம் நாள் கொண்டாடப்படும் குடியரசு தினவிழாவிற்கு ஒலிபெருக்கி சாதனங்கள், பதாகைகள், விழாநிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கு ஆகும் மொத்த செலவினத்தில் பள்ளிபாளையம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பங்கீட்டு தொகை மற்றும் பள்ளிபாளையம் நகராட்சியில் குடியரசு தினவிழா கொண்டாடுவதற்கு அடிப்படை வசதிகளான சாமியானா, ஒலிபெருக்கி, அழைப்பிதல், இருக்கை வசதி செய்தல் மற்றும் அலங்காரம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.1854/2025/இ1**

**தீர்மான எண்.265 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 28**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 வாய்க்கால் ரோடு மற்றும் நூறு தறி குடோன் ரோடு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் புதியதாக 3 தெருவிளக்குகள் அமைப்பதற்கும், மேலும் வார்டு எண். 20 பெரிய மாரியம்மன் கோவில் பகுதியில் உள்ள மின்இணைப்பு எண். 159-001-1929 ன் மின்இணைப்பு எனர்ஜி மீட்டர் பழுதடைந்துள்ளதாதை மாற்றியமைக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.1856/2025/இ1**

**தீர்மான எண்.266 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 29**

பள்ளிபாளையம் நகராட்சியில் அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் நகராட்சிக்கு சொந்தமான பகிர்மானக்குழாய் மற்றும் போர்வெல் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு சாலைகளில் தண்ணீர் அதிகளவில் வெளியேறுகிறது. இதன் காரணமாக நெடுஞ்சாலைத்துறை மற்றும் நகராட்சியால் மேற்கொள்ளப்படவேண்டிய சாலைப்பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள திட்டப்பணிகள் நிறைவடையும் வரை 7 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,50,000/-ல் மேற்கொள்ளவும், மேலும், தற்போது ஒப்பந்த காலம் டிசம்பர் 2025 உடன் முடிவடைவதால், மீண்டும் அதே ஒப்பந்ததாரருக்கு 3 மாத காலத்திற்கு (ஜனவரி 2026 முதல் மார்ச்2026) நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.267 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 30**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் தற்போது அம்ரூத் 2.0 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டப்பணிக்கு நகராட்சி பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள HDPE குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நகராட்சியின் மூலம் உடனடியாக சரிசெய்வதற்கு தேவையான HDPE குழாய்களை கொள்முதல் செய்து பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**.1855/2025/இ1

**தீர்மான எண்.268 நாள்.23.12.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) மோ.செல்வராஜ்,
தலைவர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.